



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏமப்பூர் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியையும், தி.எடையார் ஊராட்சியில் உதவி மின் பொறியாளர் அலுவலகம் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி , விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் , மாவட்டச் செயலாளர் .நா.புகழேந்தி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் .ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ. புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் பி. வி. ஆர். சு. விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், ஊராட்சி மன்றத் தலைவர்கள் எடையார் சுந்தர், ஏமப்பூர் தேவி செந்தில் மற்றும் பலர் உடனிருந்தனர்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் , கூடுதல் தலைமை செயலர் ( நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ) சிவ்தாஸ் மீனா முன்னிலையில், நகராட்சி நிர்வாகம் ( ம ) குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 11 ஒன்றியங்களைச் சார்ந்த 1286 குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மற்றும் கயத்தாறு ஒன்றியங்களைச் சார்ந்த 45 வழியோர குடியிருப்புகளுக்கான ரூ .1387.73 கோடி மதிப்பிலான கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி , ரூ .48.39 கோடி மதிப்பில் சாத்தூர் நகராட்சியில் முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் ரூ .251.20 கோடி மதிப்பில் இராஜபாளையம் நகராட்சியில் முடிவுற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களை தொடங்கி வைத்தார்கள் .

### வராகநதி ஆற்றின் குறுக்கே ரூ.3 கோடி மதிப்பீட்டில்

# செவலபுரை அணைக்கட்டு சீரமைக்கும் பணி!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, மே 28-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் வராகநதி ஆற்றின் குறுக்கே செவலபுரைஅணைக்கட்டு வாயிலாகசெஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டத்தில் சுமார் 15 ஏரிகள் மூலம் சுமார் 2064 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

செவலபுரை அணைக்கட்டு பிரதான கால்வாயில் கடலி அருகே உள்ள தொட்டி பாலம் கடந்த 2019 ஆம் ஆண்டு பெய்த கன மழையினால் உடைப்பு ஏற்பட்டது.இதனால்செவலபுரை அணைக்கட்டு வாய்க்காலில் செல்லும் நீர் வீணாக சங்கராபரணி ஆற்றில் சென்றது.

இதை அடுத்து செவலபுரை அணைக்கட்டுவாய்க்காலில் உள்ள தொட்டி பாலத்தினை புதியதாக கட்ட வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் புதிய தொட்டி பாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

கடலிஊராட்சி அருகே செவலபுரை அணைக்கட்டு தொட்டி பாலம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் பிரதான கால்வாய் உடைப்பு ஏற்பட்ட தொட்டி பாலத்தினை புதியதாக அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் ரமேஷ், உதவி பொறியாளர் தினேஷ்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோத்துங்கன், சரவணகுமார், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன்,ஒன்றிய கவுன்சிலர்கள்ரவிச்சந்திரன். காசியம்மாள் கோதண்டம், ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ராஜேந்திரன்,ஒன்றிய பொருளாளர் சரவணன்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சேலம் வருகைதரும் முதல்வருக்கு மாபெரும் வரவேற்பு!

# சேலம் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழா! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

### ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு அழைப்பு!

சேலம், மே 28-

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் முத்திரைச் சாதனைகள் பலபடைத்தது சேலம் மாவட்டம் ! மாங்கனி மாவட்டம் எனப் புகழ் படைத்த அந்தச் சேலம் மாவட்டத்தில், சேலம் மாநகரில் 1944இல் நடைபெற்ற மாநாட்டில் தான் நீதிக் கட்சி என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தால் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். சென்னையில் நடைபெற்ற அதன் தொடக்க விழாவில் பங்கேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்தக் காலகட்டத்தில் சேலம் மாநகரில் தான் தங்கி மாடர்ன் தியேட்டர் நிறுவனத்திற்காக மந்திரிகுமாரி முதலிய திரைப் படங்களுக்கு கதை வசனம் எழுதிப் புகழ் வளர்த்து வந்தார்.

அதன்பின், சேலம் மாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாடுகள் பல நடைபெற்ற சேலம் மாவட்டம் கழகத்தின் கோட்டையானது. அண்ணன் வீரபாண்டி ஆறுமுகம் சேலம் மாவட்டத்தின் தளகர்த்தராக விளங்கி கழகத்தைக் கட்டிக் காத்ததுடன் அரசின் சார்பில் பல திட்டங்களையும் கொண்டு வந்து சேலம் மவட்டத்தின் முன்னேற்றத்திற்காக அருந்தொண்டாற்றியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைவதற்கு முன்னர் நீண்ட காலமாகக் கோரிக்கைகள் பல வைத்து இரும்புத் தொழிற்சாலை சேலத்திற்கு வரவில்லை. 1967இல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகி சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக ஒன்றிய அரசை வலியுறுத்தி எழுச்சி நாள் கடைப்பிடித்தார். அப்போதும் சேலம் இரும்பாலை சேலத்திற்கு வந்தபாடில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின், 1969இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் புது டெல்லியில் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய போது, சேலம் இரும்பாலைத் திட்டம் இடம்பெறாத நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பில் ஒப்புதல் அளிக்கமாட்டேன் எனக் கூறி போர்க்குரல் எழுப்பினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்றைய தீர்க்கமான போர்க் குரலின் விளைவாக அடுத்த சில நாளில், சேலம் இரும்பாலைக்கு அனுமதி வழங்கினார் பிரதமர். அதனைத் தொடர்ந்து பிரதமர் இந்திரா காந்தி அவர்களையே சேலத்திற்கு அழைத்து இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டி, இன்று சேலம் இரும்பாலை சிறப்பாகச் செயல்பட வழிவகுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

சேலம் மாவட்டத்திற்கு மற்றொரு பெருமையான மேட்டூர் அணையின் பவள விழாவைக் கொண்டாடினார் கலைஞர். சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகம் அமைத்தார். சேலத்தில் 50 ஆண்டுகளுக்கு மேல் கனவாயிருந்த புதிய இரயில்வே கோட்டத்தைக் கொண்டு வந்தார். சேலத்தில் மருத்துவக் கல்லூரி செயல்படச் செய்தார்.

சேலத்தில் அரசு மகளிர் கல்லூரி, ஆத்தூரில் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி ஆகியவற்றை ஏற்படுத்தினார். சேலம் மாநகராட்சிக்காக ரூ.283 கோடி ரூபாயில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம், சேலம் மாநகருக்கு ரூ.183 கோடி செலவில் பாதாள சாக்கடை திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றினார்.

சேலத்தில் ரூ.136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை உருவாக்கினார். ரூ.36 கோடி செலவில் சேலம் திருமணிமுத்தாறு வெள்ளக் குட்டை ஓடை தூய்மைப்படுத்தும் திட்டம் நிறைவேற்றினார். ஏத்தாப்பூரில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏற்காட்டில் தாவரவியல் பூங்கா, சேலம் மாவட்டத்தில் 9 உழவர் சந்தைகள், சேலம் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை ஏற்படுத்தினார்.

ஆத்தூர் சங்ககிரி, ஓமலூர் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், ரூ.38 கோடியில் சேலம் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், சேலம் நகர காவல் ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ஆகியவற்றைக் கட்டினார்.

மேட்டூரில் 600 மெகாவாட் அனல் மின் திட்டம் நிறைவேற்றினார். பலஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமான சேவைகளை சேலத்தில் மீண்டும் செயல்படச் செய்தார். முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றபின் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் போலவே சேலம் மாவட்ட வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி, 11.12.2021 அன்று சேலம் மாவட்டம் சீலநாயக்கன் பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1242 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பல புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தியுள்ளார்.

இப்படி சேலம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு அரசின் மூலம் பல்வேறு பெருமைகள் சேர்த்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை 03.06.2023 அன்று சென்னை மாநகரில் சிறப்பாக கொண்டாடவிருக்கும் முதமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் சேலம் மாநகருக்கு 11.06.2023 அன்று வருகை தர இருக்கிறார். அன்று உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்து நம் நெஞ்சங்களில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சேலம் மாவட்டத்தில் தொடங்கி வைத்து நலத் திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்.

மறுநாள் 12.06.2023 அன்று காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையை திறந்து வைக்கிறார்கள். இந்த சிறப்பான நிகழ்ச்சிகளுக்காக சேலம் மாவட்டத்திற்கு வருகைதரும் நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு மிகச் சிறப்பான முறையில் நாம் வரவேற்பு வழங்கிடுவோம்.

இது தொடர்பாக வரும் 30.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு சேலம் ஐந்து ரோடு ரத்தினவேல் ஜெயகுமார் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கழக மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொறுப்பாளர்கள், மாவட்டக் கழக உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூர், ஒன்றியக் கழக, கிளைக்கழக நிர்வாகிகள் பல்வேறு சட்டமன்றத் தொகுதிகளையும் சார்ந்த கழகச் செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் வருகைதந்து கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி முதலமைச்சர் அவர்களின் சேலம் மாவட்ட வருகை முழுவெற்றி பெற உதவுமாறு அமைச்சர் கே.என். நேரு கேட்டுக்கொண்டார்.

### 4,744 ஏக்கர் நிலங்களில் பயிர்களைக் காக்கும் பொருட்டு

# தாராபுரம் வட்டம் நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறப்பு!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

திருப்பூர், மே 28-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து 4,744 ஏக்கர் நிலங்களில் பயிர்களைக் காக்கும் பொருட்டும் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும் தண்ணீரை மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிக்கிணங்க, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் உள்ள நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கப் பாசனப் பகுதியிலுள்ள 4,744 ஏக்கர் நிலங்களில் நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டும், கால்நடைகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும், நல்லதங்காள் பிரதானக் கால்வாய் மதகு வாயிலாக 21.05.2023 முதல் 15.06.2023 முடிய உள்ள காலங்களில் (இரு நனைப்புகள் 2×7 நாட்கள் தகுந்த இடைவெளிவிட்டு) 14 நாட்களுக்கு 42.34 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் மற்றும் உடையார் குளம் பாசன பகுதியிலுள்ள 87.36 ஏக்கர் நிலங்களில் நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டும், ஆற்று மதகு மூலம் நல்லதங்காள் ஓடை வழியாக உடையார் குளத்திற்கும் 21.05.2023 முதல் 27.05.2023 வரை 6 நாட்களுக்கு 12.96 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 4831.36 ஏக்கர் நிலங்களுக்கு 55.30 மில்லியன் கன அடிக்கு மிகாமல் 21.05.2023 முதல் 15.06.2023 முடிய 26 நாட்களுக்குள், தகுந்த இடைவெளி விட்டு, நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதன்படி, நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து நல்லதங்காள் ஓடை பிரதான கால்வாய் வழியாக 35 கன அடியும், ஆற்று மதகு வழியாக 25 கன அடியும் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தாராபுரம் வட்டத்திலுள்ள பகுதியிலுள்ள 4,744 ஏக்கர் நிலங்களில் பயிர்களைக் காக்கும் பொருட்டும், கால்நடைகளின் குடிநீர் தேவைக்கும் பயனடையும். விவசாய பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாக உபயோகித்து நீர்வளத்துறைக்கு நீர்பங்கீட்டுப்பணிகளில் முழு ஒத்துழைப்பு நல்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஒன்றிய கழக செயலாளர்கள் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், எஸ்.வி. செந்தில்குமார், மூலனூர் ஒன்றி யக்குழு துணைத்தலைவர் ப.பழனிசாமி, துரை தமிழரசு, மூலனூர் பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் மக்கள் தொண்டன் க.தண்டபாணி, நல்லதங்காள் பாசன சங்க தலைவர் மணிவாசகம், நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கம் செயற்பொறியாளர் கோபி, உதவி செயற்பொறியாளர் முருகேசன், உதவி பொறியாளர் சுப்பையன் உள்பட விவசாய சங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே வராகநதி ஆற்றின் குறுக்கே ரூ.3 கோடி மதிப்பீட்டில் செவலபுரை அணைக்கட்டு சீரமைக்கும் பணிக்கு சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



தனது திராவிட மாடல் அரசின் சட்டப் போராட்டத்தினால் “தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து நடத்தலாம்” என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பைப் பெற்ற முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு விழா! அனைத்து ஜல்லிக்கட்டு பேரவை அமைப்புகளின் சார்பாக ஜூன் 5ஆம் தேதி புதுக்கோட்டையில் நடைபெறவிருக்கும் நன்றி அறிவிப்பு மாநாட்டிற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், பந்தல் சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.